[1972 ஆகஸ்ட் 12

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் தற்சமயம் ஒன்பது கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன.

(இ) இவைகளில் எட்டு லாபத்தில் நடக்கின்றன. ஒன்று இன்னும் உற்பத்தி துவங்கவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : துணைத் தலைவரவர்களே, இந்த கூட்டுறவு தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலையில் தயாரிக்கும் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா? ஏற்றுமதி செய்யப்படுகிறதானால் அதன் தரத்தை உயர்த்தி இன்னும் அதிகமான ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கு தயாரிக்கப்படும் தேயிலை நல்ல தரமாக இருப்பதனால்தான் அந்தத் தொழிற்சாலைகள் லாபத்தில் நடைபெறுகின்றன. இந்தத் தேயிலை கொச்சின் ஹார்பர் வழியாக ஏற்றுமதிக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எம். தேவராசன் : துணைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இன்னும் புதிதாக எத்தனை பகுதிகளில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் அதிகமான கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று ஒரு மேற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அவைகளைத் தொடங்குவதற்கு ஏராளமாக உதவி வேண்டுமென்று 'டீ போர்டை' வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் அளிக்கின்ற உதவியைப் பொறுத்து இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த டீ பாக்டரிகள் தற்போது எங்கெங்கே உள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டத்தில்.

திறந்த வெளிச் சிறைகள்

* 102 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா--

திறந்த வெளிச் சிறைகள் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்பொழுது தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நீலகிரித் தோட்டத்திலும், (2) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரிலும், (3) சேலத்திலும் திறந்த வெளிச்சிறைச்சாலைகள் உள்ளன

1972 ஆகஸ்ட் 12]

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை தாலூகாவில் உள்ள முத்துப்பட்டி கிராமத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வேங்கடமங்கலம் கிராமத்திலும், திறந்தவெளிச்சிறைச்சாலைகள் அமைக்க தமிழ்நாடு சிறைத்துறை தலைவர் செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார். அவைகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்

*103. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்—மதுரை சாலையை இணைக்கும் வகையில் கரூருக்கு அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் 1972-73-க்கான தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளரின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவாவர்களே, இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 12¼ லட்சம் ரூபாய்.

வேலூர்—திமிரி மலைப்பாதை

*104. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 28-10-70 அன்று நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், வேலூரிலிருந்து பாலமதி வழியாக திமிரி வரையில் அமைந்திருக்கும் புதிய மலைப்பாதையைச் செப்பனிட ரூ. 3,75,000 விசேஷ ஒதுக்கீடு செய்யும்படி அரசினரைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அது அரசின் பரிசிலனையிலுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : துணைத் தலைவரவர்களே, இந்த சாலை அமைக்கப்படுவது பற்றி பரிசிலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள்.